DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.
CC.No.06/2023
2026-ம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின்
அ.சா.15 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)
திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 15 | தொழில் | - | **காவல் ஆய்வாளர்** |
| பெயர் | - | **திருமதி. கற்பகம்** | வட்டம் | - | சென்னை |
| க/பெ | - | **சங்கரன்** | சமயம் | - | |
| கிராமம் | - | **கோட்டுர்புரம் குற்றபிரிவு காவல் நிலையம் சென்னை** | வயது | - | 50/2026 |
| சாதி | - | | | | |

**15.05.2026**

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது, சென்னை கோட்டுர்புரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த நான் 01.12.2022-ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, நிலைய உதவி ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்கள் பதிவு செய்து, குற்ற எண்.192/2022, சட்டப்பிரிவுகள் 288, 338 இ.த.ச-படியான வழக்கில் பதிவு செய்து, முதல் விசாரணையை உதவி ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்கள் முதற்கட்ட விசாரணை முடித்து, மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை 288, 338 இ.த.ச-விலிருந்து, 288, 304(A) இ.த.ச.வின் படி கடந்த 03.12.2022-ம் தேதி பிரிவு மாற்றம் செய்து, எனது புலன் விசாரணைக்கு வைத்தார். நான் வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சாட்சிகள் முத்துராஜ், சக்தி (எ) சக்திவேல், காளீஸ்வரி, கண்ணன், அமுதா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இறந்த நபரான மணிகண்டனின் பிரேதத்தை கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பிரேத கிடங்கில் இருந்த பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார், கிரிதரண், மொய்தீன், மணி,

சக்திவேல், அபிலாஸ், ராஜேந்திரன், பஞ்சாயத்தார்கள் ஆகிய பாலகிருஷ்ணன், பரமசிவம், ரவிச்சந்திரன், கனகசபாபதி, பாலு, ஆகியோர்கள் முன்னிலையில் விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவர் குகன் முதுநிலை உதவி பேராசிரியர் கோவை அரசு மருத்துவமனை அவர்கள் வசம் காவலர் 820 திரு.சதீஸ்குமார் மூலம் அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே விபத்து பதிவேடு செய்த மருத்துவர் சதீஸ் வால்பாறை அரசு மருத்துவமனையை சேர்ந்தவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். பின்னர் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், எனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என்று தெரியவரவே 06.12.2022-ம் தேதி எதிரி ஐயப்பன் என்பவரை 15.00 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்தில் ஆஜராகியுள்ளவரை காரணம் கூறி கைது செய்து, தக்க இருநபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். பின்னர் 26.12.2022-ம் தேதி எதிரி செந்தில்பாலு என்பவரை காலை 11.30 மணியளவில் வால்பாறை காவல் நிலையத்தில் ஆஜராகியுள்ளவரை காரணம் கூறி கைது செய்து, தக்க இருநபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். பின்னர் சாட்சிகள் அனைவரையும் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதற்கட்ட விசாரணை முடித்த உதவி ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களையும் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவயிடத்தை பார்வையிட்ட போது, உதவி ஆய்வாளர் பதிவு செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவயிடத்தை ஒத்திருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. பின்னர் 10.02.2023-ம் தேதி கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் குகன் அவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து, 10.02.2023-ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 288, 304(A) இ.த.ச-வின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி 30.11.2022-ம் 13.15 மணி என்றால் முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் பெறப்பட்ட தேதி 01.12.2022- பகல் 19.30 மணி என முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்க 29.15 மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை எனது விசாரணை அறிக்கையில் விசாரித்து சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வால்பாறை மருத்துவமனையில் இருந்து தகவல் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்றால் 30.11.2022-ம் தேதி பகல் 01.30 மணியளவில் மருத்துவமனையில் இருந்து தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், காவல் நிலையத்திலிருந்து காவலர் மருத்துவமனைக்கு சென்று, விசாரணை செய்த போது,

பாதிக்கப்பட்ட நபரை மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக தெரியவந்தது. பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்ட நபரை அனுப்பி வைத்ததாக தகவல் கிடைத்தவுடன் உடனடியாக பொள்ளாச்சி மருத்துவமனை சென்று, வாக்குமூலம் பெற முயற்சித்தோமா என்றால் இல்லை. உடனடியாக பாதிக்கப்பட்ட நபரை பொள்ளாச்சி மருத்துவமனை சென்று விசாரித்து, வாக்குமூலம் பெற்றிருந்தால் வழக்கின் உண்மை விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து தகவல் பெற்றவுடன் சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்காமல் காவல் துறை கடமையிலிருந்து தவறியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் சம்பவயிடமாக குறிப்பிடப்பட்டுள்ள இடம் பாதிக்கப்பட்ட நபர் கீழே விழுந்த இடம் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபர் எந்த இடத்திலிருந்து கீழே விழுந்தார் என்பதை காட்டும் வகையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் இல்லை என்றால் அவர் எங்கிருந்து விழுந்தார் என்பதற்கான உயரம் பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. பார்வை மகஜரில் எவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உயரம் குறிப்பிட்டு இல்லை. 2-வது மாடியில் பின்பக்கம் சாரம் அமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவயிடத்திலிருந்த கட்டிடத்தை நான் பார்வையிட்டேன் என்றால் சரிதான். அந்த கட்டிடம் தற்போது வரை தரைதளம் மற்றும் அதற்கு மேல் ஒரு தளம் உள்ளது என்றால் தற்போது, சரியாக நினைவில்லை. அந்த கட்டிடத்தில் 2-வது மாடி இல்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் மஞ்சள் நிற நைலான் கயிறு மற்றும் ெஹல்மட் இருந்ததாக சாட்சிகள் சொல்லியுள்ளார்கள். சம்பவயிடத்தில் அந்த பொருட்களை நாங்கள் கைப்பற்றினோமா என்றால் நான் சம்பவயிடத்தை பார்வையிட்ட போது, அவ்வாறு எந்த பொருளும் இல்லை. நான் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன், யார் எனக்கு சம்பவயிடத்தை அடையாளம் காட்டியது என்றால் 03.12.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று பார்த்தேன். உதவி ஆய்வாளர் தங்கராஜ் எனக்கு சம்பவயிடத்தை அடையாளம் காட்டினார். நான் இவ்வழக்கு கோப்பை எந்த தேதியில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 03.12.2022-ம் தேதி எடுத்துக்கொண்டேன். 30.11.2022-ம் தேதி மருத்துவர் சதீஸ் என்பவரை விசாரித்து, நான் வாக்குமூலம் பதிவு செய்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு. தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நான் கையொப்பம்செய்யும் போது, படித்து பார்க்காமல் இயந்திர தனமாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடமே செல்லவில்லை என்றாலும், அதனால் தான் சம்பவயிடம் ஒரு மாடி கட்டிடமா அல்லது 2 மாடி கட்டிடமா என்று எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லாததால் தான் அங்கு என்ன என்ன பொருட்கள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N. மீனாட்சி BA., BL.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.